செ.வெ. எண்: 483 நாள்: 25/07/2011

# பத்திரிக்கைச் செய்தி

## மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் ஆணையின்படி மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு.சி.சண்முகவேலு அவர்கள் தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகத்தின் செயல்பாடுகள் குறித்து ஆய்வு

மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களின் ஆணையின்படி மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு. சி.சண்முகவேலு அவர்கள் 25.7.2011 அன்று காலை 10.30 மணியளவில் சென்னை தொழிற் கூட்டுறவு வங்கியின் கூட்ட அரங்கில் தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகத்தின் (பூம்புகார்) செயல்பாடுகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை செயலாளர் திரு. சி.முத்துக்குமாரசாமி, இ.ஆ.ப., தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திருமதி. ஷீலா ராணி சுங்கத், இ.ஆ.ப., அவர்கள், உயர் அதிகாரிகள் மற்றும் விற்பனை நிலையங்களின் மேலாளர்கள் கலந்து கொண்டனர்.

ஆய்வின் போது, டெல்லி, கொல்கத்தா, பெங்களூரு மற்றும் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து விற்பனை நிலைய மேலாளர்களின் செயல்பாடுகள் மற்றும் கருத்துக்களை கேட்டறிந்தார். மேலும் கலைப் பொருட்களின் உற்பத்தி நிலையங்களின் செயல்பாடுகள் குறித்தும் கேட்டறிந்தார்.

கலைப் பொருட்களின் உற்பத்தியைப் பெருக்கவும், விற்பனையை அதிகரித்து இலாபத்தை ஈட்டவும், தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கினார்.

*******************************************************************************************

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**